# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

**ஆணை நாள் – 02.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா. செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA.13698/F/2024**

திரு S.R. சையத் அலி பாஷா -- மனுதாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர் / வக்ஃப் ஆய்வாளர்,
கண்காணிப்பாளர் அலுவலகம்,
திப்பு சுல்தான் மார்க்கெட், -- பொது அதிகார அமைப்பு
எண்.1, ஸ்டம்ப் அக்ரஹாரம், சேலம் - 636 001.

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 17.06.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 20.07.2024 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 10.10.2024 |

*******

**ஆணை**

இவ்வழக்கு இன்று (02.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு S.R. சையத் அலி பாஷா என்பவர் காணொளி காட்சி வாயிலாக ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7-ன்கீழ் மனுதாரர் விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்பது அவசியமாகிறது. இருப்பினும் மனுதாரர் இவ்வாணையத்தின் அழைப்பாணையைப் பெற்றுக் கொண்டும், இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. அவரது வருகையின்மையை இவ்வாணையம் பதிவு செய்கிறது. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 8-ன்கீழ் பொதுத் தகவல் அலுவலர் விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்பது அவசியமாகிறது. இருப்பினும் பொதுத் தகவல் அலுவலர் இவ்வாணையத்தின் அழைப்பாணையைப் பெற்றுக் கொண்டும், இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. அவரது வருகையின்மையை இவ்வாணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், சேலம், வக்ஃப் கண்காணிப்பாளர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், சேலம் மாவட்டம் மற்றும் வட்டம், ஜாக்கிர் அம்மாபாளையம் மற்றும் செட்டிச்சாவடி (G.S.236, 237, 247 & 248) வக்ஃப் சம்பந்தமாக வக்ஃப் கண்காணிப்பாளர் கொடுத்த அறிக்கையின் நகல், அவ்வறிவிப்பிற்கு வக்ஃக் ஆய்வாளர் கொடுத்த அறிக்கையின் நகல், அவ்வறிப்பில் வக்ஃப் அலுவலர் முன்பு பரம்பரையாளர்களின் மகாசபை கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் முழு விவரம், மேற்படி அறிவிப்பு சம்பந்தமாக சேலம் சரகம் வக்ஃப் கண்காணிப்பாளர் மற்றும் வக்ஃப் ஆய்வாளர் அவர்கள் முதன்மை செயல் அலுவலர் அவர்களுக்கு அளித்த அறிக்கையின் நகல், மேற்படி அறிவிப்பு சம்பந்தமாக நாளதுவரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரம் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 6 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு தகவல்கள் வழங்கப்படவில்லை எனபதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (02.04.2025) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

**4. இன்றைய விசாரணையில் மனுதாரர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் ஆஜராகாத காரணத்தினால், மேற்படி வழக்கானது தேதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்படுகிறது.**

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்.SA.13698/F/2024**
**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு:-**
பொதுத்தகவல் அலுவலர் / வக்ஃப் ஆய்வாளர்,
கண்காணிப்பாளர் அலுவலகம்,
திப்பு சுல்தான் மார்க்கெட்,
எண்.1, ஸ்டம்ப் அக்ரஹாரம்,
சேலம் - 636 001.

**வழக்கு எண்.SA.13698/F/2024**
**மனுதாரர்**
திரு S.R. சையத் அலி பாஷா, த/பெ. E.S. சையத் ரவூத்ப்பாஷா,
எண்.30, மேலபக்கத்துறை, ஆயங்குடி அஞ்சல்,
காட்டுமன்னார்கோயில் தாலுக்கா,
கடலூர் மாவட்டம்.

Copy to: File
SNPS / 04.04.2025